Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 81

யாழ்ப்பாணம் சித்திரை 19 சபி; ஜுல் 16 திங்கட்கிழமை (1-5-72)

உங்களுக்குத் தேவையான
இலங்கையில் தயாரிக்கப்பெற்ற
மட்பாண்ட
மலசலகூட
பாவனைப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# தவறணை முறை வெற்றிபெற நிதி அமைச்சர் வாழ்த்துகிறார்

## "உபகைத்தொழில் வளர்ச்சிக்கும் விரைவில் ஏற்பாடு செய்யப்படும்"

யாழ்ப்பாணம் திங்கள்

**இன்று யாழ் மாவட்டத்தில் மரவரிமுறை ஒழிந்து தவறணை முறை அமுலுக்கு வருகின்றதல்லவா? இப்புதிய திட்டம் வெற்றிகரமாக செயல்படவேண்டும் என நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.**

யாழ் மாவட்டத்தில் உப [illegible] பிற மாவட்டங்களுக்கு வழங்கவும் கள்ளின் விலையை உறுதிப்படுத்தவும் யாழ் மாவட்டத்தில் விரைவில் வடிசாலை அமைக்கப்படும் என்றும் இது பனை தென்னை ஆகியவற்றுடன் தொடர்புடைய உபகைத்தொழில்களுக்கு மூலாதாரமாக அமையும் என்றும் டாக்டர் பெரேரா தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் டாக்டர் பெரேரா தமது செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

மேமாதம் 1ம் திகதி பரீட்சார்த்தமாக யாழ்ப்பாணம் நவீன அனுபவமொன்றை அடையக்கூடியதாக இருக்கும். கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்த மரவரிமுறைக்குப் பதிலாக கூட்டுறவு அடிப்படையில் அமைந்த தவறணை முறை இடம்பெறும். வடக்கின் அபிவிருத்தி திட்டமிட்ட சில படிமுறைகளில் மரவரிமுறை பயனுள்ள நோக்கங்களை நிறைவேற்றியுள்ளது. நாளடைவில் இந்த அமைப்பானது சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியவும் ஒதுக்கப்பட்ட இனத்தின் பொருளாதார சுபிட்சத்திற்கும் வழிவகுத்தது. காரணமும் வர்க்க நலனை பாதுகாக்கவே மரவரிமுறை ஏற்படுத்தப்பட்டதென்பது பொதுவான அபிப்பிராயமாகும், கள்ளிறக்குவோரின் பெரும்பாலோர் நாட்கூலிகளாக முதலாளிகளின் ஆண்டிலுக்கு இரைப்பொருளாக மாறினர்.

ஏற்கனவேயிருந்த மரவரி முறை பிரதிகூலங்களைத் தவிர்க்க ஏற்படுத்தப்பட்ட இந்த நவீன முறையானது கள்ளிறக்குவோரின் தனிப்பட்ட நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு சந்தர்ப்பமளிக்கும், இந்தக் காரணத்தின் பொருட்டு கள்ளிறக்குவோருடன் கலந்துரையாடியதன் விளைவாக ஒவ்வொரு கள்ளிறக்குவோருக்கும் நலம்பயக்கக்கூடிய கூட்டுறவு தவறணை முறையை ஆரம்பிக்கலாமெனும், 5-ம் பக்கம் பார்க்க)

தவறணை முறை

## ஒரு வார காலம் ஒரு சிறு சலுகை

யாழ்ப்பாணம், திங். யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்படவிருக்கும் கள்ளுத்தவறணைகள் அமைப்பதில் சில இடங்களில் எதிர்பாராத விதத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டிருப்பதால் தவறணைகள் அமைக்கப்படாத இடங்களில் தவறணை முறைச் சட்டதிட்டங்களை மீறுவோர் மீது உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுப்பதில்லையென பொலிசாரும் கலால் இலாகாவினரும் முடிவு செய்துள்ளதாகவும் இதற்றிய முடிவு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கூட்டிய ஒரு மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

தவறணைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கள்ளு விற்பனை செய்வது குற்றம். இவ்வித குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது பொலிசாரும் கலால் பகுதியினரும் நடவடிக்கை எடுப்பர். ஆனாலும் தவறணைகள் நிறுவப்படுவதில் தாமதம் ஏற்படும் இடங்களிலும் தவறணைகள் சரியாக அமையும் வரையும் சுமார் ஒருவாரம் அல்லது பத்துத் தினங்களுக்கு இச்சட்ட விதிகள் சம்பந்தமாகக் கடும் நடவடிக்கை எடுப்பதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆனால் கள்ளுத் தவறணைகள் அமைப்பதற்கு இடையூறு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அளவெட்டி அடைவு கடை

## கொள்ளையுடன் கொலைக் குற்றச்சாட்டு!

### உரிமையாளர் தம்பிமுத்து காலமானதன் எதிரொலி

யாழ்ப்பாணம், திங்கள் அளவெட்டியின் சமீபத்தில் கொள்ளையடிக்கப்பட்ட தவறணை அடைவு பிடிக்கத் தகுதி பெற்றவரான திரு. தம்பிமுத்து நேற்றுக் காலமானார். இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை செய்த திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் திரு. தம்பிமுத்துவின் மரணம் ஒரு கொலையென்று தீர்ப்பளித்துப் பொலிசாரை மேல் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

திரு. தம்பிமுத்துவின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போது காலஞ்சென்றவரின் மனைவி திருமதி தம்பிமுத்துவும் சாட்சியமளித்தார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 17ந் திகதி இரவு அளவெட்டியில் தவறணை அடைவு பிடிக்கத் தகுதி பெற்றவரான திரு. தம்பிமுத்துவின் வீட்டினுள் கொள்ளைக் கோஷ்டியொன்று நுழைந்து திரு. தம்பிமுத்துவையும் அவரது மனைவியையும் தாக்கி [illegible] அவர்களை மூர்ச்சையடையச் செய்ததுடன் அவர்களது [illegible] பொருட்களைக் கொள் (5ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் தொழிலாளரின்
மேதினம்
காலம் - 1-5-72 பி. ப. 5-30 மணி
இடம் - யாழ் நகரமண்டபம்
சிறப்புரையாளர்கள்
திரு. அ. அமிர்தலிங்கம்
திரு. காசி ஆனந்தன்
திரு. மு. ஆலாலசுந்தரம்
திரு. க. துரைரத்தினம்
மற்றும் தொழிற்சங்கப் பிரமுகர்கள்
— தொழிலாளர் கழகம்
குறிப்பு பஸ்போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது 4141

## கொட்டில்களில் நேற்று வாடிக்கைக்காரர் அதிகம்!

யாழ்ப்பாணம், திங்கள் வடபகுதியில் நிறுவப்பட்டுள்ள 200 கள்ளுத் தவறணைகளில் இன்று முதல் கள்ளு விற்பனை நடைபெறும். இக்கள்ளுத் தவறணைகள் காலை 8மணி முதல் இரவு 8மணி வரை திறந்திருக்கும். சில கள்ளுத்தவறணைகளில் முகாமையாளராகவும் கணக்காளராகவும் பெண்களும் கடமையாற்றுவார்கள்.

வடபகுதியில் உள்ள 19 கள் உற்பத்தி விற்பனை சங்கங்கள் இக்கள்ளுத் தவறணைகளை நடாத்தும். இச்சங்கங்களுக்கு அப்பகுதிகளில் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்று கள்ளுக் கொட்டில்களில் வாடிக்கையாளர்கள் கூடுதலாக காணப்பட்டனர். சில கொட்டில்களில் வாடிக்கையாளர்கள் நீண்ட நேரமாக அவ்விடங்களில் கொண்டிருந்தனர். கொட்டில்களு (5-ம் பக்கம் பார்க்க))

## பதில் சுகாதார மந்திரி

கொழும்பு, ஞாயிறு திருமதி சிவா ஒபயசேகரா பதில் சுகாதார மந்திரியாக இன்று பதவி ஏற்றார். சுகாதார மந்திரி திரு ஆரியதாச வெளிநாடு சென்றுள்ளார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு பலாங்கொடையில் இன்று இழுக்கப்பட்ட ஜாதிக சம்பதவின் 37-வது சுவீப் சீட்டிழுப்பில் பரிசு பெறும் முதல் மூன்று டிக்கட்டுகளும் வருமாறு:—

| | |
|---|---|
| 12 L 000987 | 54,650 |
| 14 D 000167 | 54,650 |
| 13 Q 000334 | 54,650 |

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
முத்துராமன் - தங்கவேலு
நடித்த
# நிலவே நீ சாட்சி

ராணி [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
ஜனாதனின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

யாழ்ப்பாணத்தில் இன்று 60வது தினம்
சாந்தி — சங்கானை
V. S. T. பிலிம்ஸ் தினசரி 6-15 மட்டும்
# குத்து விளக்கு
குறிப்பு:
இன்று காட்சியின் போது "குத்துவிளக்கு" நடிக நடிகையர்கள் நேரில் காட்சியளிப்பார்கள்

மனோஹரா [யாழ்ப்பாணம்]
ஜெமினி-சௌகார் ஜானகி (இரு வேடங்களில்)
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
# காவியத்தலைவி
திரைக்கதை வசனம் - டைரக்ஷன் - கே. பாலச்சந்தர்

பணத்திற்காக குழந்தையை பேரம் பேசும் விசித்திரத் தம்பதிகள்
பணத்தைக்கொண்டு பெற்றோரை தேடும் குழந்தை
இவர்களை சந்திக்க
யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், கே. ஆர். விஜயா, சந்திரபாபு, பேபி ராணி
நடித்த
# கண்ணே பாப்பா
டைரக்ஷன்: பி. மாதவன், பி. ஏ.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
★ சிவாஜி
★ லக்ஷ்மி
★ முத்துராமன்
★ நிர்மலா
நம்பியார்
நாகேஷ்
சச்சு

மற்றும் பலர் நடித்த
# தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

ஜெய்சங்கர்
மனோகர்
ஆனந்தன்
'தேங்காய்' சீனிவாசன்
பாரதி புஷ்பமாலா
நடித்த
முழுநீள நகைச்சுவைச் சித்திரம்
# நான்கு கில்லாடிகள்


## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரிங் வேலைகளின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4946

### விற்பனைக்கு

ஆயர்பாத இர சிப்பலின் புது வருடம் 1972 சித்திரை முதல் 73 பங்குனி வரை உங்களின் தன்மைகளை விளக்கவும் சிறந்த நன்மைகள் பெறவும் வழிகள் தரப்படுகின்றன. யாழ்நகரில் வந்து குவிகின்றன. ஆயர்பாடி சோதிடர் நிலையம் தெல்லிப்பழை. 4904

### கல்வி

Holiday tuitions-Home visited இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள்சென்று ஆங்கிலம், எண்கணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 4909. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4909


சாந்தி சங்கானை
தினசரி இரவு 9-30
திங்கள் 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
**தனிப் பிறவி**

நியூ சுவலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
**காவல் தெய்வம்**

பவானி
முனாய்
தினசரி 6-30 இரவு 9-30
1-5-72 பி ப 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**பெற்றால்தான பிள்ளையா?**

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
**கணவன்**

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**நான் ஆணையிட்டால்**

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, இரவு 9-45
சிவாஜி-பத்மினி
நடித்த
**விளையாட்டுப்பிள்ளை**

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p. m.
Sat, Sundays 10-30 a.m
Ray Milland
in
THE PREMATURE BURIAL
(adults only)

தினசரி 2-00 இரவு 9-45
சம்மிகபூர்-சைராபானு
நடித்த
BLUFF MASTER
பிளவ் மாஸ்டர்
(ஹிந்தி)


### கல்வி

யாழ்ப்பாணக் கல்விநிலைய G. C. E. O. L. A L. விஞ்ஞான கலை வர்த்தக வகுப்புக்கள் 3-5-72 இல் ஆரம்பமாகும். முதலாம் இரண்டாம் தேதிகளில் அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறிடங்களில் விடுதி வசதியுண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம். 304/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4981

மகளிர் கல்விநிலையம் 3-5-72 இல் 306/1 இலக்கக் கட்டிடத்தில் ஆரம்பமாகும். பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படும். சங்கீதம், சமையல், தையல், ஆங்கிலம், தமிழ், சிங்களம், கணிதம், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம். விடுதிவசதியுண்டு. மகளிர் கல்விநிலையம் 306/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4980

### காணவில்லை

அவுருப்பிட்டி, பறளுந்து வீரக்கோன் என்பவரது அவுருப்பிட்டி பறளுந்து கமலதாஸ் என்பவரை 21-4-72 முதல் காணவில்லை. கறுப்பு நிறம், 5 அடி உயரம், வயது 17 முகத்தில் வெட்டுக்காயம் போன்ற குறிப்பும், காலில் எட்டு அங்குல நீள தழும்பும் உண்டு. கடைசியாக காணப்பட்ட போது வெள்ளை சாரம், சேட் அணிந்திருந்தார். தகவல் தரவும். சன்மானம் கொடுக்கப்படும் எஸ். செனியூட், 8-2 ம் குறுக்குத் தெரு, நெக்கிழமேசன், குருநகர், யாழ்ப்பாணம். 4221

### தேவை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரபல ஸ்தாபனம் ஒன்றில் சுத்தேசர் பியோனுக்கு கடமையாற்றத் தகுதி உடைய ஒருவருக்கு வேலை தேவை. ஆங்கில அறிவு உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4975 C/o ஈழநாடு. 4975

# 'நமது பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டும்'

— குமாரசூரியர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நம் நாட்டின் தனித்துவமான கலைகளை வளர்க்க வேண்டும். நமது கலைகளையும் மொழியையும் மற்றவர்கள் வளர்ப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நாமே நமது மொழியையும் கலையையும் வளர்க்கவேண்டும். நமது பாரம்பரிய தனித்துவத்தை பாதுகாக்கவேண்டும்"

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா இசைவிழா மண்டபத்தை தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் குமாரசூரியர் மேலும் கூறியதாவது:

ஆறுமுகநாவலருக்குப் பிறகு நம்நாட்டில் எழுத்துத்துறை மிக வளர்ச்சி குறைவாக இருந்தது. மக்கள் அரசாங்கம் பதவிக்கு வந்தபின் நம்நாட்டு எழுத்துத்துறையில் புதிய மறுமலர்ச்சியும் புத்துணர்வும் தோன்றியுள்ளது. எழுத்தாளர்களுக்கு மக்கள் அரசாங்கம் ஊக்கமும் ஆதரவுமளித்துவருகிறது.

நாட்டுக்கூத்தை வளர்ப்பதற்காக மேயர் துரையப்பா எடுக்கும் நடவடிக்கைகளை அமைச்சர் பாராட்டினார். ரஸிக ரஞ்சன சபாவின் நன்முயற்சிகளை வாழ்த்தினார்.

# சகலவளமும்கொண்ட பிரதேசம் நெடுந்தீவு

## தபால் அமைச்சர் உரை

குருநகர், ஞாயிறு

அயல் நாடுகளிலிருந்து எதையும் எதிர்பார்க்காமல் இங்குள்ள மூலப்பொருட்களைப் பயன்படுத்தியே இப்பகுதியின் பொருளாதாரத்தை வளம்படுத்தமுடியும். இங்கு உற்பத்தியாக்கப்படும் பொருட்களை கிற்று மற்ற கிராமங்களில் உற்பத்தியாக்கும் பொருட்களை வாங்கவேண்டும்"

இவ்வாறு நெடுந்தீவில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் உரையாற்றிய தபால் அமைச்சர் குமாரசூரியர் தெரிவித்தார்.

தீவுப் பகுதி ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. பி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

பருத்தி, உழுந்து பயறு போன்ற பயிர்களை இந்தப் பூமியில் உற்பத்திசெய்ய முடியும். இதுமட்டுமல்ல பனையின் மூலம் நீங்கள் பெறக்கூடிய வருவாய்கள் பல இருக்கின்றன. இவை விட மந்தைவளர்க்கக்கூடிய வசதிகளும் இங்கு நிறைய இருக்கின்றன. இத்தனை வளமும் கொண்ட இந்த பிரதேசத்தை நீங்கள் வளமான நாடாக்க முயலவேண்டும். இங்கு இருக்கும் சந்ததிகள் இரண்டுவிதமான ஏற்றுமதிகளை நீங்கள் செய்ய முடியும் இக்கல்லை கண்ணும்புக்கும் பயன் படுத்தமுடியும். சிறு கற்களாக ஏற்றுமதி செய்யவும் முடியும்.

இத்தனை வசதியும் கொண்ட ஒரு கிராமமாக நெடுந்தீவு இருக்கின்றது போல் வேறு ஒரு நாட்டில் இருந்திருந்தால் அந்தநாடு ஒரு செல்வம் கொழிக்கும் நாடாக அமையும்.

எனவே நெடுந்தீவு மக்கள் தமது நாட்டில் இருக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி பொருளாதாரத்தில் தன்னிறைவுகாண முன்வர வேண்டும் இதற்கு அரசாங்கமும் இயன்ற உதவிகளைச் செய்யும் என்றார்.

நெடுந்தீவு தபால் கந்தோர் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியைப் பார்வையிட்டபின் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தையும் பார்வையிட்டார் இதன் பின் அமைச்சர் பிற்பகல் 3 மணிக்கு குறிகட்டுவான் துறைமுகத்தை வந்தடைந்தபோது நயினாதீவு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளையினரால் வரவேற்கப்பட்டார். இதன்பின் புங்குடுதீவுக்கிராமசபைத் தலைவர் திரு. வ. மதியாபரணத்தின் இல்லத்தில்நடைபெற்ற தேனீர்விருந்து வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சர் அங்கிருந்து ஊர்வலமாக தட்டையம்புலம்உயர்பால் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் அமைச்சரது இந்த விஜயத்தில் மேலதிக அரசாங்க அதிபர்

(5-ம் பக்கம் பார்க்க)

# 1971-ல் சீனாதான் நமக்கு அதிக உதவிதந்தது!

கொழும்பு ஞாயிறு

இலங்கைக்கு 1971-ம் ஆண்டு உதவி வழங்கிய எல்லா நாடுகளும் அளித்த உதவிகளை விட சீனா அதிக பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளது.

வெளிநாட்டு உதவி பற்றிய திணைக்களம் வெளியிட்ட புள்ளி விபரங்களில் இது தெரியவருகிறது.

1971-ம் ஆண்டு இலங்கை பிறநாடுகளிடமிருந்து 31 கோடி ரூபாவுக்கான பொருளாதார உதவிகளைப் பெற்றுள்ளது. இதில் 14 கோடி 50 லட்சம் ரூபாவுக்கான உதவியை சீனா வழங்கியுள்ளது.

இலங்கைக்கு உதவிகள் தேவைப்பட்ட நேரங்களில் சீனா உடனடியாக முன்வந்து உதவிகள் வழங்கிவந்திருப்பதாக திருமதி ஸ்ரீமாவோ அரசுத் தலைவர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

இத் திணைக்களப் புள்ளிவிபரப்படி சோவியத் யூனியன் 1971-ம் ஆண்டு 24 லட்சம் ரூபாவுக்கான உதவிகளை மட்டுமே அளித்துள்ளது.

சீனாவுக்கு அடுத்த பெரிய அளவில் அமெரிக்காவே உதவியளித்துள்ளது. (சி.பி.ஏ.)

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், இங்கு

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்: மாலை 6-30 - 7-30 திருமதி குமாரதேவி கனகசிங்கம் - பாட்டு. திரு கே சித்திவிநாயகம் - வயலின். திரு எம் என் செல்லத்துரை - மிருதங்கம்.

7-30 - 8-00 செல்வி ஜயராணி இராசலிங்கம், சிவனேஸ்வரி சிவானந்தம் - பாட்டு, செல்வி வி பி ஞானேஸ்வரி - வயலின், செல்வன் அ ரகுநாதன் - மிருதங்கம்.

8-00 - 8-15 தலைமையுரை - திரு வீ சோமசுந்தரம், 8-15 - 9-15 செல்வி அம்பிகை சுப்பிரமணியம் - பாட்டு. செல்வி தனதேவி சுப்பையா - வயலின் செல்வி ஜெயமணி சுகிஐயாத்துரை - மிருதங்கம். 9-15 - 10 30 திரு திலகநாயகம் போல் - பாட்டு திரு க. இரா கிருஷ்ணன் - வயலின் திரு ஐ சிவராஜம்,

இசை விழா யாழ் மணிக்கூட்டு வீதியிலுள்ள சபா மண்டபத்தில் நடைபெறும்

யாழ்-கொழும்பு

## நேரடி பஸ் சேவை

குருநகர், ஞாயிறு

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் நேரடி பஸ் சேவை ஒன்றை நடத்துவதற்கு இ போ ச நடவடிக்கை எடுத்துவருகின்றது. இந்த பஸ் சேவையை நடத்தவேண்டுமென்ற தீர்மானம் யாழ் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு இ போ ச அதிகாரிகளின் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## புதிய அரசியல் அமைப்பால் பலநன்மைகள் அடையலாம்

குருநகர் ஞாயிறு

'மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பணியில் ஐக்கிய மக்கள் அரசு செயற்பட்டுவருகின்றது. அரசுக்கு சில பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டபோதிலும் மக்களின் தேவைகளை கவனத்திற்கொண்டு அத்தியாவசிய தேவைகளைச் செய்துவருகின்றது'

இவ்வாறு புங்குடுதீவு புதிய சந்தைக் கட்டடத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் குறிப்பிட்டார்.

புங்குடுதீவுக் கிராம சபைத் தலைவர் திரு. க. மதியாபரணம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா வைபவத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

புதிய அரசியலமைப்பு ஏற்பட்டபின் இலங்கை மக்கள் அனைவரும் இன்னும் பல நன்மைகளை அடையமுடியும். புதிய அரசியல் அமைப்பு விதிகள் சகல மக்களும் அறியக்கூடிய வகையில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்படவிருக்கின்றது. எனவே இந்த அரசியல் சாசனத்தின் நன்மைகளை எல்லாரும் அறிந்துகொள்ளலாம்.

சிறுவர்

## உடை தயாரிப்பு நிலையம்

குருநகர், ஞாயிறு

தீவுப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையில் பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாரந்தனையில் சிறுவர் உடைதயாரிப்பு நிலையம் ஒன்றையும் புங்குடுதீவில் பனம்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றையும் வேலணையில் சிறுவர் விளையாட்டுப் பொருள்கள் நிலையம் ஒன்றையும் நிறுவுவதற்கு தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பி. நடராசா நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

இத் திட்டத்தில் மண்கும்பானில் பனம்தும்பு உற்பத்திநிலையம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான அனுமதிகளை அரசு கொடுத்திருப்பதாகவும் அடுத்த மாதம் முதல் இதற்கான ஆரம்பவேலைகளை மேற்படி காரியாதிகாரி பிரிவிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

### சகலவளமும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு எ. சோசப் யாழ். தபால் தந்தி அத்தியட்சகர் திரு. எம் நடராசா தபால் தந்தி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. தயா கருணாரத்ன தீவுப்பகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு பி. கதிரவேலு ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்

### திரு. தம்பிமுத்து

திருமதி கனகம்மாவின் அன்புக் கணவரும், சிவஞானம் (கனடா) Dr. சிவபாலன் (அரசாங்க வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) சிவதேசம் ஆகியோரின் தந்தையுமான வே. தம்பிமுத்து அவர்கள் 30-4-72 ல் சிவபதமடைந்துவிட்டார். ஈமக்கிரியைகள் அளவெட்டி பெரியவளவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் [illegible] நிகழும். நேசிதர்களும் உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 4222

## 'தொழிலாளர் வாழ்வு வளம் பெறவேண்டும்'

எழுதுமட்டுவாள் ஞாயிறு

கைகட்டி வாய்பொத்தி அடிமைகளாக வாழ்ந்த தொழிலாளப் பெருமக்கள் ஒன்றிணைந்து வீரம் பெற்று விடுதலை பெற்றுவாழ்வு பெற்ற தினத்தை நினைவில் நிறுத்துகின்றது மேதினம்.

பொது சேவைதொழிற் சங்க சம்மேளன வடமாநிலக்கிளை தலைவர் திரு சோ. முத்துலிங்கம் விடுத்த மே தினச்செய்தியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இத்துணை முக்கியத்துவம் வாய்ந்த மேதினத்தை ஆண்டாண்டு கொண்டாடி சுதந்திரத்தைப்பேணி மகிழும் தொழிலாள உலகம் தங்கள் ஒற்றுமையையும் ஒற்றுமையின் பலத்தையும் மகத்துவத்தையும் வலியுறுத்தி நினைவுறுத்தும் பொன்நாளாக இந்த மேதினத்தைக் கருதுகின்றனர்.

இன்றைய மேதினத்தை எண்ணும்போது தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமைக்கும் உறுதிக்கும் சவால் விடுவதுபோன்று அமைந்திருக்கின்றது. ஒவ்வொருநாளும் ஏறி நிற்கும் அதிகப்படியான வாழ்க்கைச்செலவு இது உடனடியாகச் சமாளிக்கவேண்டிய பிரச்சினைகளில் ஒன்றாகும். இவ்வேளையில் இக்காரணத்தை முன்வைத்து 50 ரூபா இடைக்கால வாழ்க்கைப்படிக் கோரிக்கையை அநேக தொழிற்சங்கங்கள் எடுத்துக்கொண்டது மிகநியாயமானதும் அரசு வழங்கவேண்டியதொன்றுமாகும்.

இப்புனிதமான தொழிலாளர் தினத்தில் அனைத்துத் தொழிலாளர் சங்கங்களினதும் ஐக்கியம் மேலும்வலுப்பெற்றுத் தொழிலாளர் வாழ்வுவளம் பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

## மதுபானம் விற்கக்கூடாது

குருநகர், ஞாயிறு

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் செல்லும் புகையிரத வண்டியில் மதுபானம் விற்கக்கூடாதென்ற தீர்மானத்தை யாழ். மாவட்ட இணைப்புக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது

யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தலைமையில் நடந்த இந்த மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. க ஜெயக்கொடியினால் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது,

## தவறணை முறை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்ளிறக்குவோர் கட்டுறவு அங்கத்தவராகி தவறணைத் தாங்களே இருக்குமா அங்கத்துவம் கள்ளிறக்குவோருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படுவதுடன் கூட்டுறவுப்பகுதி அந்த அங்கத்தவர்களுக்கு மட்டும் தொழில் வாய்ப்புக்களை அளிக்கும் கூலிநிர்ணயசபையின் தீர்மானத்திற்கிணங்க அவர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்படும் அவர்கள் சேமலாபநிதிக்கும் வேலை நட்டஈட்டுக்கும் உரித்துடையவராவர் மேலும் ஒவ்வொருவரும் கணக்குப்பார்வைக்காலமுடிவிலும் இலாபத்தின் ஒரு பங்கை மொத்தமாகப்பெறுவர்.

### கிடைக்கும் லாபம்

இப்புதிய முறையை வெற்றிப்பாதை நோக்கிச் செலுத்துதல் கள்ளிறக்குவோரைச் சார்ந்ததாகும், தவறணைக்கு எவ்வளவு கள்ளை ஒருவர் வழங்குகிறாரோ அதைப் பொறுத்தே அவர் அடையக்கூடிய லாபத்தின் பங்கும் அமையும், தரமான கள்ளு வழங்கும் தவறணைக்கே கூடியளவு ஆதரவு கிடைக்கக்கூடுமாதலால் தரமான கள்ளை வழங்குமாறு கள்ளிறக்குவோர் ஒவ்வொருவரும் கடமைசாரும்.

வாடிக்கைக்காரரைக் கவர்ந்திழுக்கக்கூடியவகையில் தவறணைகளை அமைத்தல் ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனங்களாலும் முடியுமானதாகும் வேலைத்திற்கு பாடுமே கூச்சப்படாத அளவிற்கு வசதியான இடங்களாக அவை அமைதல் அவசியம், தகுதியான சுகாதார நிலைமைகள் பராமரிக்கப்படவேண்டும், தம்புரமான நிலைமைகளும் நல்ல தரத்தையும், பொதுவான சுகாதாரச் சூழ்நிலைகளையும் தொடர்ந்து மேற்பார்வைசெய்தல் சங்கத்தின் பொறுப்பாக இருக்கும்.

வடக்கில் பனையினதும், தென்னையினதும் பயன்களை அபிவிருத்திசெய்வது அரசாங்கத்தினது உறுதியான நோக்கமாகும். மிகையான கள்ளை சேகரித்துப் பிற மாவட்டங்களுக்கு வழங்குவதற்கும் விலை உறுதிப்படுத்துவதற்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடிசாலை அமைக்கப்படும், இவ்வடிசாலையின் உருவாக்கம் பனையுடனும் தென்னையுடனும் தொடர்புபட்ட உபகைத்தொழில்களை நிறுவுவதற்கு ஓர் மூலாதாரமாக அமையுமென நம்பப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் வாலிபர்களுக்கு வேலை வழங்கும் சந்தர்ப்பமாக இது அமையும். கூட்டுறவுத் தவறணைகளின் வெற்றிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

## கொள்ளையுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடித்துச் சென்றதுடன் அவரையும் கட்டிவைத்துச் சென்றதாகவும் இதைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய விசாரணைகளின் விளைவாக ஆறு பேர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதுடன் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் பலவும் மீட்கப்பட்டதும் 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே.

கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்ட திரு. தம்பிமுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்தார். இவர் நேற்று காலமானார்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணை செய்த யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தி "இது ஒரு கொலை" எனத் தீர்ப்பளித்தார். இதைத் தொடர்ந்து கொள்ளையுடன் கொலையும் செய்ததாக றிமாண்டில் உள்ள ஆறு சந்தேக நபர்கள் மீதும் தேடப்பட்டுவரும் ஏழாவது நபர் மீதும் குற்றம் சாட்டிப் பொலிசார் வழக்குத் தொடர உத்தேசித்துள்ளனர். இக்குற்றச்சாட்டுக்கள் பற்றி அட்டர்ணி ஜெனரலின் ஆலோசனையை பொலிசார் நாடியுள்ளனர்

## 10 பவுண் நகைகள் சிக்கின

யாழ்ப்பாணம், திங்கள்

அளவெட்டி அடவுக்கடை கொள்ளை பற்றி விசாரணை நடத்த சென்ற பொலிஸ் கோஷ்டியினர் நாவலப்பிட்டியில் மனோரஞ்சன் என்ற நபரிடமிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து சில நகைகளை கைப்பற்றினர்.

பொலிஸ் கோஷ்டியினர் நாவலப்பிட்டி மன்னார் ஆகிய இடங்களிலிருந்து 10 பவுண் நிறையுள்ள நகைகளை கைப்பற்றியுள்ளனர்.

இக்கொள்ளை சம்பந்தமாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள 6 சந்தேக நபர்களும் நாளை மல்லாகம் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

## கொட்டில்..

1 ம் பக்கத் தொடர்ச்சி

க்கு வாடிக்கைக்காரர்கள் பிரசாரிகை கூறுவது போலிருந்தது.

சில இடங்களில் இன்னும் கள்ளுத் தவறணைக்கான தரக் கொட்டில் நிறுவப்படவில்லை. வேறு சில இடங்களில் தரா கொட்டில்கள் அவசரகுறைவாக நிறுவப்பட்டிருந்தது. மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் அப்பகுதிகளில் தரா கொட்டில் போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நகரத்தினுள் சில இடங்களில் தவறணைக் கொட்டில்போட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. 2ம் வட்டாரத்தில் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் கள்ளுத் தவறணை போடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கள் உற்பத்தி விற்பனை சங்கத்தினர், நேற்று முன்தினம் யாழ். மேயர் திரு அல்பிரட் துரையப்பாவை சந்தித்து நகர எல்லைக்குள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை இடங்கள் பற்றி ஆலோசனை செய்தனர், பழைய விதியில் கள்ளுத் தவறணை அமைக்கக் கூடாதென்ற மாநகர சபையின் தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுமாறு சங்கத்தினர் கேட்டுக்கொண்டபோது 'அது புனித பிரதேசம்' என மேயர் தெரிவித்தார். மக்கள் எதிர்ப்புள்ள இடங்களில் தவறணை கொட்டில்களை போடுவது புத்திசாலித்தனமல்லவென்று வேறு இடங்களை தெரிவு செய்வது நல்லதென்றும் மேயர் அவர்களிடம் ஆலோசனை தெரிவித்தார்.

## வேலணையில் பஸ் டிப்போ

குருநகர், ஞாயிறு

வேலணையில் பஸ் டிப்போ ஒன்றை நிறுவுவதற்கு இ. போ. ச நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த டிப்போ அமைப்பதற்கான இடம் தெரிவுசெய்யப்பட்டதும் இதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த டிப்போ திறக்கப்படுவதால் தீவுப்பகுதியின் பஸ்சேவை சீராகிவிடலாம் என்று பொதுமக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

### மணிவாசகம்

அன்பும் மனதைக் கட்டுப்படுத்த ஒரு வழி தேவாரம்பாடுவதாகும் ......நல்லவர்கள் நிமிர்ந்த முடியாது. உலகத்தைத்திருத்த முயலுவதற்கு பதில் நம்மை நாம் திருத்திக் கொள்வோம்...... எல்லா வேலைகளையும், கடவுளை அடையவேண்டு மென்ற ஒரே நோக்கத்துடன் செய்க.

—யோக சுவாமிகள்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண பரிதாபி வருடம் சித்திரை மாதம் 19-ந் திகதி (1-5-72)


## தொழிலாளர் உரிமை

இன்று மே மாதம் முதல் திகதி. உலகத் தொழிலாளரின் உரிமை ... [illegible]

## உலகுக்கு வழிகாட்டும் ஒரு நூல்!

கைதடியிலே ஒரு பெரியவர் இருப்பதாகவும் அவரைப் பார்க்கலாமென்றும் ஓர் அன்பர் அழைத்துச் சென்றார். பசுமையானவரம்புகள் சூழ்ந்த ஒரு குடிசைக்குச்சென்றதும், உள்ளிருந்து ஒரு குரல் வரவேற்றது. முனிபுங்கவர்கள் பர்ணசாலைகளில் வசிப்பரென்று இராமாயணத்தில் படித்ததைத் தான் அக்காட்சி நினைப் பூட்டியது.

முன் அறிவிப்பு இல்லாமல் நாங்கள் சென்றும், அப் பெரியவர் சற்றும் தாமதிக்க வைக்கவில்லை. என் முன்னுள் அனுபவம் ஒன்று சற்றே தயக்கம் செய்தது.

சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்னாக கொழும்புத்துறையிலே யோகசுவாமிகளை தரிசிக்க ஓரன்பர் முதல் முறை ... [illegible]

... மொழிகளையும் அவரது சொல் மொழிகளையும் பற்றித்தான் வேத வாக்குகள் போன்ற அம்மொழிகளெல்லாம் இவருக்கு மனப்பாடம்! எவ்வளவு உற்சாகத்துடன்பேசுகின்றார்!

அவர் பேசுவதைக் கேட்கக் கேட்க, நம் மனதுக்குத்தான் எவ்வளவு சாந்தி! தெய்வமே பேசுவதுபோலிருந்தது. இரண்டு மணியாகியும் அவரைவிட்டு வரவே மனமில்லை. ஏதோ கோவிலுக்குச் சென்றதுபோன்ற மன நிறைவுடன் திரும்பினேன்.

... யுள்ளதைப் பார்த்தேன். இதை நான்கு பெரியார்கள் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். அதில் முதல்வர் மேற்குறித்த மார்க்கண்டு முனிவர். அடுத்தது ஏ. செல்லத்துரை அவர்கள். பெரியவரின் வீட்டுப்படி யாழ்ப்பாணத்திலே சிவதொண்டன் நிலையத்தைக் காத்துவரும் தொண்டர். மூன்றாமவர் இலங்கையின் முன்னுள் கவர்னர்ஜெனரலான சேர்பிள் பிரபுவின் புதல்வர் கந்தசாமி. ... இப்போது இவர்தான் சேர்பிள் பிரபு ...

### ஜெயராஜன் எழுதுவது...

[illegible]

... சிலவும் அவர் திருப்பித் தாராரோ.

அப்பர் சுவாமிகள்.

## அமைச்சர் ஒடியல்கூழ் சுவைத்தார்

குருநகர், ஞாயிறு

தபால்தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் நெடுந்தீவில் அமைக்கப்பட்ட ஒரு விருந்தில் ஒடியல் கூழ் குடித்து மகிழ்ந்தார்.

நெடுந்தீவில் அமைச்சருக்கு கொடுக்கப்பட்ட மதிய போசன விருந்துக்கு முன் இந்த ஒடியல் கூழ் கொடுக்கப்பட்டபோது கூழின் சுவையை பாராட்டினார். தினமும் இங்கிருந்தால் கவலையாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

### தேவை

நன்கு பெயர் வாய்ந்த ஸ்தாபனத்தில் விற்பனை பொறுப்பதிகாரிகள் (Sales Representatives) கடமையாற்ற ரூபா 1500/- பிணைப்பணம் கட்டக்கூடிய தமிழ், ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்த இளைஞர்கள் தேவை. உழைப்புக்கு தகுந்த நல்ல ஊதியம் கொடுக்கப்படும். 2-5-72 காலை 9 மணி முதல் பகல் 12-00மணிவரை நேர்முகப் பரீட்சை நடைபெறும். M. K. R. K. என்டேர்பிரைஸ் கொலனியல் பஸார் 119/9 கே.கே.எஸ்.ரோட், யாழ்ப்பாணம்.

## மாதிரி கூட்டுப்பண்ணை அமைக்க கோரிக்கை

சங்கானை, ஞாயிறு

வலிகாமம் மேற்கு கம்யூனிஸ்ட் கட்சிக்கிளை அண்மையில் கூடியபோது பின்வரும் தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, உடுவில், காங்கேசன்துறை ஆகிய ஆகிய பாராளுமன்றத் தொகுதிகளின் மத்தியகேந்திரமும் சிறந்த விவசாய நிலப்பிரதேசமுமான ... சுமார் 30 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் ... கூட்டுப்பண்ணை ஒன்றை அமைத்துத்தரும் வண்ணம் அரசாங்கத்தைக் கோருதல்.

இது சம்பந்தமாக வெளிநாட்டு காரிகளுடன் வட்டுக் கோட்டைத் தொகுதி ஆளுமன்ற உறுப்பினர் ஊடாக தொடர்பு கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதுசம்பந்தமாக வலி மேற்குக் காரியாதிகாரி, கிராம விசாலிப்புப் பகுதி, வலி-மேற்கு கமத்தொழிற் சேவை பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் மாதிரிப் பண்ணை செய்துவருவதாகவும் தெரியவந்துள்ளது.

### வடக்கில் 19 உபதபால் நிலையங்கள்

குருநகர், ஞாயிறு

தபால்தந்தி அமைச்சராக செல்லையா குமாரசூரியர் பதவியேற்றபின் வடபகுதியில் 19 உபதபால் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன ... தபால் அத்தியட்சகர் திரு எம். நடராசா தெரிவித்தார்.

நெற்றுபுலிகுடுதீவு தட்டையன்புலம் உபதபால் நிலையத் திறப்புவிழாவில் தலைமைதாங்கிப் பேசியபோது அவர்மேலும் கூறியதாவது:

எமது தேவைகளை உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுப்பதில் அமைச்சர் மிகவும் தீவிரம்காட்டி வருகின்றார். இதனால் இந்த இளைஞரின் சேவை காற்றுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.